රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**Ministry of Public Administration and Management**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකා. சுதந்திரச் சதுக்கம் கொழும்பு 07 இலங்கை.

Independence Square, Colombo 07, Sri Lanka.

Website : www.pubad.gov.lk

දුරකතන / தொலைபேசி / Telephone: (94) 011-2696211-13

ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94) 011-2695279

ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: secretary@pubad.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: MPA /IAD/ADM/GA13/FNCT-III

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2018.03.07

அமைச்சு செயலாளர்களுக்கும்
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்
அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்களுக்கும்

**"புவி மணித்தியாலயம் (Earth Hour) 2018"**

**2018 மார்ச் மாதம் 24 ஆந் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணியில் இருந்து 9.30 வரை**

மனிதனின் நேரடியான அல்லது மறைமுகமான செயற்பாடுகள் காரணமாக சுற்றாடலுக்கு தீங்கு பயக்கும் வாயு வெளியேற்றம் அதிகரிப்பதன் காரணமாக தற்போது முழு உலகுமே காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. புவியின் இருப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள இவ் வாயு வெளியேற்றத்தை குறைப்பது தொடர்பாக உலகத் தலைவர்களின் அவதானத்துக்கு உட்படுத்தும் பொருட்டு 2007 மார்ச் மாதம் 31 ஆந் திகதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் சுமார் 2.2 மில்லியன் மக்கள் மின் விளக்குகளை அணைத்து ஒரு மணிநேரம் இருட்டில் கழிக்கின்றனர். அன்றைய தினம் அது **"புவி மணித்தியாலயம் (Earth Hour)"** எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், புவி மணித்தியாலய நிகழ்வு தொடர்பான உலகளாவிய ஏற்பாடுகள் World wide fund for nature (WWF) நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

02. உயிர் பல்வகைமை சமவாயத்தின் நோக்கங்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றும் பொருட்டு 2010 இல் பங்குதாரர்களான அரசுகள் கலந்துகொண்ட அமர்வில் அறிமுகப்படுத்தப்பட்ட உயிர் பல்வகைமை ஐவீ இலக்குகள் 20 இன் முதலாவது இலக்காக கருதப்படுகின்ற, "ஆகக் குறைந்தது 2020 ஆம் ஆண்டளவில் உயிர் பல்வகைமையின் பெறுமானம் தொடர்பாகவும் அதனைப் பாதுகாப்பது மற்றும் நிலையாகப் பேணுவது தொடர்பாகவும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாக மக்களை விழிப்பூட்டல்" என்பதை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக கூட்டிணைந்து செயற்படுவதற்கு இற்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் உயிர் பல்வகைமை சமவாய செயலகமும், WWF நிறுவனமும் இணக்கம் தெரிவித்திருந்தன. மேலும், அடி மட்டத்தில் இருந்து பெருந்தொகையான மக்கள் இணைந்துகொள்ளும் புவி மணித்தியாலய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தை அடிப்படையாக கொண்டு தலைசிறந்த, புத்தாக்க பல்வகைமை தொடர்பான விழிப்பூட்டும் பல நிகழ்ச்சித்திட்டங்களை 2018 – 2020 வரையான மூன்றாண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு தீட்டமிடப்பட்டுள்ளன.

03. அதற்கமைய உயிர்பல்வகைமை சமவாயத்தின் பங்குதார அரசொன்றான இலங்கையும் இது தொடர்பாக கைகோர்த்துச் செயற்பட வேண்டிய பொறுப்புடன் பின்னிப்பிணைந்துள்ளதுடன், சமவாயத்தின் கேந்திர மத்திய நிலையமாக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு 'புவி மணித்தியாலய' நிகழ்வினை ஏற்பாடு செய்யுமும் பொருட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் காரணமாக தற்போது உயிர்பல்வகைமையில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமையை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. உயிர்பல்வகைமை உயர் மட்டத்தில் பேணப்படுகின்ற எமது நாட்டிலும் கூட உயிர்பல்வகைமைகள் இதன்மூலம் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன.

04. அதற்கமைய, 2018 மார்ச் 24 ஆந் திகதி இரவு 8.30 இலிருந்து 9.30 வரையில் 'புவி மணித்தியாலம்' நிகழ்வு தொடர்பாக இந்நாட்டிலுள்ள அனைத்து அமைச்சுக்களும் அரச நிறுவனங்களும் 1.3 மில்லியன் அரசாங்க அலுவலர்களை அவர்களது தன்னார்வத்துடன் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால் தேசிய ரீதியாக அநாவசியமான மின்பாவனையை குறைப்பதற்கான நீண்டகால நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக மேற்படி ஒரு மணநேரத்தினுள் தங்களது நிறுவனத்திலுள்ள அநாவசியமான மின்விளக்குகளை அணைத்து, அச் சந்தர்ப்பத்தை அர்த்தமுள்ளதாக்குவதற்கு பங்களிப்பு நல்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவதுடன், தங்களது நிறுவகத்திலுள்ள அனைத்து அரச அலுவலர்களினதும் தன்னார்வத்துடனான பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்கு விழிப்பூட்டும்படியும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**ஒப்பம்/ ஜே. ஜே. ரத்னசிறி**
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு